முருகன் பாடல் வரிகள்
Murugan song lyrics

'மதுரை' சோமசுந்தரம் பாடிய 'மருத மலை மாமணியே'

கோடி மலைகளிலே கொடுக்கும் மலை எந்த மலை?
கொங்கு மணி நாட்டினிலே குளிர்ந்த மலை எந்த மலை?
தேடி வந்தோர் இல்லமெல்லாம் செழிக்கும் மலை எந்த மலை?
தேவாதி தேவரெல்லாம் தேடி வரும் மருதமலை ...

ஆ ... ஆ ... ஆ ... மருதமலை ... மருதமலை . . . முருகா ...

மருதமலை மாமணியே முருகையா

(மருதமலை மாமணியே முருகையா . . . தேவரின் குலம் காக்கும் வேலையா அய்யா ...
மருதமலை மாமணியே முருகையா)

தேவரின் குலம் காக்கும் வேலையா அய்யா . . . மருதமலை மாமணியே முருகையா

மணமிகு சந்தனம் அழகிய குங்குமம் (2)

அய்யா உனது மங்கல மந்திரமே

(மருதமலை)

தைப்பூச நன்னாளில் ... தேருடன் திருநாளும் . . . பக்தர்கள் கொண்டாடும் கந்தையா ... ஆ ... (2)

(மருதமலை)

கோடிகள் குவிந்தாலும் கோமகனை மறவேன் . . . ஆ ... ஆ ... ஆ ...

கோடிகள் குவிந்தாலும் கோமகனை மறவேன்

நாடி என் வினை தீர ... நான் வருவேன் (2)

அஞ்சுதல் நிலை மாறி ... ஆறுதல் உருவாக . . . எழு பிறப்பிலும் உன்னை எட்டுவேன் ... ஆ ... (2)

(மருதமலை)

சக்தித் திருமகன் முத்துக் குமரனை மறவேன் ... நான் மறவேன்
பக்திக் கடலென பற்றிப் பெருகிட வருவேன் ... நான் வருவேன் (2)

பரமனின் திருமகனே ... அழகிய தமிழ் மகனே (2)

காண்பதெல்லாம் ... உனது முகம் ... அது ஆறுமுகம்
காலமெல்லாம் ... எனது மனம் உருகுது முருகா (2)

அதிபதியே குருபரனே ... அருள் நிதியே சரவணனே (2)

பனி அது மழை அது நதி அது கடல் அது . . . சகலமும் உனதொரு கருணையில் எழுவது (2)

வருவாய் ... குகனே ... வேலையா . . . ஆ ... ஆ ... ஆ ... ஆ ...

தேவர் வணங்கும் மருதமலை முருகா ...

(மருதமலை).

this -pdf- document was created using 'OpenOffice' from
Sun Microsystems Inc. http://www.openoffice.org